புதுவை பல்கலைக்கழக அலுவலர் கூட்டுறவு கடன் சங்கம் (அளவறை) எண்.பி.508
ஆர்.வி. நகர் காலாப்பட்டு புதுச்சேரி-14

# தேர்தல் பேரவைக் கூட்ட அறிவிப்பு

அன்பார்ந்த உறுப்பினர்களுக்கு,

நமது சங்கத்தின் நிர்வாக குழுவிற்கு ஒன்பது (9) இயக்குநர்களை தேர்ந்தெடுக்க கீழ்க்கண்ட விபரப்படி தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தல் 1973 ஆம் ஆண்டு புதுவை கூட்டுறவுச் சங்கங்களின் விதி 32-ன் படி நடத்தப்படும்.

## தொகுதி விபரம்

| வ. எண் | தொகுதி எண் | தொகுதி விபரம் | தேர்ந்தெடுக்கப்பட உள்ள இயக்குநர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | I | ஆசிரியர் மற்றும் அதிகாரி (Group A & B) ஆகிய சங்க உறுப்பினர்கள் | 3 |
| 2 | II | ஆசிரியர் மற்றும் அதிகாரி அல்லாத உறுப்பினர்கள் ஆகிய (Group C & D) சங்க உறுப்பினர்கள் | 6<br>(இதில் ஒரு இயக்குநர் பதவி அட்டவணை இனத்து உறுப்பினருக்கு (SC members) ஒதுக்கப்பட்டுள்ளது) |

தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக்குழுவினரின் பதவி காலம் 01.10.2016 முதல் 31.03.2019 வரை ஆகும். வாக்களிக்க தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு வாக்களித்து தேர்தலை சிறப்பாக நடத்திக்கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(நிர்வாகக் குழுவினரின் முடிவுப்படி)

(U. ராமநாதன்)
தலைவர்

இடம்: ஆர்.வி. நகர்
தேதி: 08.09.2016

## தேர்தலுக்கான கால அட்டவணை

| வ. எண் | நடவடிக்கைகள் | நாள் & கிழமை | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 14.09.2016 புதன் | மதியம் 2.30 மணி | சங்க அலுவலகம் |
| 2 | வாக்காளர் பட்டியலில் ஆட்சேபணை/ திருத்தம் இருப்பின் தெரிவித்தல் | 17.09.2016 சனி | மாலை 3.00 மணி வரை | சங்க அலுவலகம் |
| 3 | தகுதியுடைய வாக்காளர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடுதல் | 19.09.2016 திங்கள் | காலை 10.30 மணி | சங்க அலுவலகம் |
| 4 | வேட்பு மனு தாக்கல் செய்தல் | 21.09.2016 புதன் | காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை | சங்க அலுவலகம் |
| 5 | வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்தல் | 22.09.2016 வியாழன் | காலை 10.30 மணி | சங்க அலுவலகம் |
| 6 | தகுதி வாய்ந்த வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் | 22.09.2016 வியாழன் | வேட்பு மனுக்கள் பரிசீலனை முடிந்தபின் | சங்க அலுவலகம் |
| 7 | வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுதல் | 23.09.2016 வெள்ளி | மாலை 3.00 மணிக்கு முன்பாக | சங்க அலுவலகம் |
| 8 | தகுதி வாய்ந்த இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | 23.09.2016 வெள்ளி | மாலை 5.00 மணிக்கு மேல் | சங்க அலுவலகம் |
| 9 | போட்டியிருப்பின் வாக்குபதிவு செய்தல் | 29.09.2016 வியாழன் | காலை 10 மணிமுதல் மாலை 1 மணிவரை | ஜவஹர்லால் நேரு ஆடிட்டோரியம் |

## குறிப்புகள்

1. வாக்காளர் பட்டியல் குறித்து ஆட்சேபணை/திருத்தம் செய்ய விரும்பும் உறுப்பினர்கள் தங்கள் ஆட்சேபணையை எழுத்து மூலமாக தகுந்த ஆதாரங்களுடன் தேர்தல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் சங்க தலைவரிடம் தெரிவிக்க வேண்டும்.

2. தகுதி வாய்ந்த வாக்காளர்களின் இறுதிப்பட்டியல் வேண்டுவோர் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.100/- செலுத்தி எழுத்து மூலம் சங்கத்தில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

3. வேட்பு மனுவினை வேட்பாளரோ முன் மொழிபவரோ அல்லது வழிமொழிபவரோ தாக்கல் செய்யலாம்

4. வேட்பு மனு பரிசீலனையின் போது ஆட்சேபணை தெரிவிப்போர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

5. போட்டியிருப்பின் வாக்குப்பதிவு நடத்தப்படும். வாக்குபதிவு முடிந்தவுடன் மதியம் 2.00 மணிக்கு மேல் வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் அதிகாரியால் முடிவ அறிவிக்கப்படும்

*****

பெறுநர்:

**அனைத்து உறுப்பினர்கள்**

……………………………………..

…………………………………..